செய்தி வெளியீட்டு எண்.633 நாள்: 28.7.2010

**12 மற்றும் 10ஆம் வகுப்பு பொதுத் தேர்வுகளில் மாநில அளவில் அதிக மதிப்பெண்கள் பெற்ற பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையின மாணவ, மாணவிகளுக்கு மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் பரிசுகளை வழங்கிப் பாராட்டினார்.**

மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் இன்று (28.07.2010) தலைமைச் செயலகத்தில், 12 ஆம் வகுப்பு மற்றும் 10ஆம் வகுப்பு பொதுத் தேர்வுகளில் மாநில அளவில் அதிக மதிப்பெண்கள் பெற்ற பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையின மாணவ, மாணவிகளை ஊக்குவிக்கும் வகையில் பரிசுகளை வழங்கிப் பாராட்டுச் சான்றிதழ்களை அளித்தார்.

இத்திட்டத்தின்படி, 12 மற்றும் 10 ஆம் வகுப்பு பொதுத் தேர்வுகளில் மாநில அளவில் முதலாவது, இரண்டாவது மற்றும் மூன்றாவது இடங்களைப் பெறுகின்ற பிற்படுத்தப்பட்ட மாணவர் ஒருவருக்கும், மாணவி ஒருவருக்கும், மிகவும் பிற்படுத்தப்பட்ட, சீர்மரபினர் வகுப்பைச் சார்ந்த மாணவர் ஒருவருக்கும், மாணவி ஒருவருக்கும், சிறுபான்மையினத்தைச் சார்ந்த மாணவர் ஒருவருக்கும், மாணவி ஒருவருக்கும் ஆக 6 முதல் பரிசுகள், 6 இரண்டாம் பரிசுகள், 6 மூன்றாம் பரிசுகள் தமிழக அரசால் வழங்கப்படுகிறது.

நடப்பாண்டு முதல் 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் மாநில அளவில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவ, மாணவிகளுக்கு வழங்கப்படும் பரிசுத்தொகைகள் முறையே ரூ.10,000/–, ரூ.8,000/–, ரூ.6,000/– என இருந்ததனை முறையே ரூ.50,000/–, ரூ. 30,000/–, ரூ. 20,000/– என உயர்த்தியும், 10 ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் மாநில அளவில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவ, மாணவிகளுக்கு வழங்கப்படும் பரிசுத்தொகைகள் முறையே ரூ.5000/–, ரூ.4000/– ரூ.3000/– என இருந்ததனை முறையே ரூ.25,000/–, ரூ.20,000/–, ரூ.15,000/– என உயர்த்தியும் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

மேலும், ஒன்றுக்கு மேற்பட்ட மாணவ, மாணவியர் ஒரே மதிப்பெண்கள் பெறும் நிலையில், அவ்வாறு ஒரே மதிப்பெண்கள் பெற்ற அனைவருக்கும் பரிசுத் தொகை வழங்கப்படுகிறது. மேற்படி பரிசுத்தொகை பெறும் மாணவ, மாணவியர் கல்வித்துறையால் வழங்கப்படும் பரிசுத்தொகை அல்லது இத்துறையால் வழங்கப்படும் பரிசுத்தொகை இதில் ஏதேனும் ஒன்று மட்டும் பெறத் தகுதியுடையவர் ஆவார்.

2010 ஆம் ஆண்டில் 12 மற்றும் 10ஆம் வகுப்பு பொதுத் தேர்வுகளில் மாநில அளவில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மை சமுதாயத்தைச் சேர்ந்த 57 மாணவ, மாணவிகளுக்கு ரூபாய் 12 இலட்சத்து 35 ஆயிரம் பரிசுத் தொகையினை இன்று (28.7.2010) புனித ஜார்ஜ் கோட்டையில் துணை முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்வின்போது, மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறைச் செயலாளர் திரு.து. நா. இராமநாதன், சிறுபான்மையினர் நலத்துறை மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை ஆணையர் திரு. பெ. மு. பஷீர் அஹமது, மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் நலத்துறை ஆணையர் திரு.ப. அண்ணாமலை மற்றும் துறை அலுவலர்களும் உடனிருந்தனர்.

* * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.